THE A. R. DAMODARAN : Sir, may I know how many words of command are made in Hindi in the N.C.C. that we the State and the Central Government should be fighting over this very small matter?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : சொற்களின் எண்ணிக்கையைப் பொறுத்து பிரச்னை அமைவதில்லை. ஆங்கிலம் வேண்டுமா இந்தி வேண்டுமா என்பதுதான் பிரச்னை. அவர்கள் இந்தி வேண்டுமென்கிறார்கள். நாங்கள் ஆங்கிலம் வேண்டுமென்கிறோம்.

Perijam Lake

* 87 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the agriculturists from Palani and Periyakulam have asked for permission to irrigate paddy crops from the Perijam lake in the Kodaikkanal taluk and the boating lake in the Kodaikkanal town;

(*b*) whether the Palani Municipality required the water for its water-supply scheme; and

(*c*) if so, the action taken thereon?

பேரிஜம் ஏரி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) கொடைக்கானல் தாலுகாவில் உள்ள பேரிஜம் ஏரியிலிருந்து கொடைக்கானல் நகருக்குள் படகு விடும் ஏரியிலிருந்தும் பழனி பெரியகுளம் விவசாயிகள் நெற் பயிருக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு அனுமதி கேட்டனரா ?

(இ) குடி தண்ணீருக்குப் பழனி முனிசிபாலிட்டி தண்ணீர் கேட்டதா ?

(உ) ஆம் எனில், அவைகளின் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாஷா : (அ) & (இ) ஆம்.

(உ) அந்த வேண்டுகோட்கள் நிறைவேற்றப்பட்டன.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சில நாட்கள்தான் அங்கே தண்ணீர் விடப்பட்டது என்றும் அது விவசாயத்திற்குப் போதவில்லை என்றும் கூறி மனு செய்தார்கள். மீண்டும் தண்ணீர் வேண்டுமென்று கேட்டால் பேரிஜம் ஏரியிலிருந்து தண்ணீர் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : விதி முறைகளை அனுசரித்துத் தண்ணீர் கொடுக்கப்படும்.